விலங்கு வளர்ப்பு, சிறியளவு கைத்தொழில்கள், மூலதனக் கருவிகளைக் கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான கடன்வழங்கல் பெரும்பாலும் முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே மாற்றமின்றி இருந்தது. வீடமைத்தல், மின்னூட்டல், நீர்வழங்கல் போன்றவற்றுக்கு வழங்கப்பட்ட கடன்கள் 1980 ஆம் ஆண்டில் 26 சதவீதத்தால் ரூ. 234 இலட்சங்களுக்கு அதிகரித்தது.

வங்கித்தொழில் நிறுவனங்களின் கிராமக்கடன் வழங்கலில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது, 1979 ஆம் ஆண்டில் இருந்தும் கடன் வழங்கல் முறையில் கடுமையான ஒழுங்கு முறைகள் வங்கிகளால் பின்பற்றப்பட்டபோதும் கடன்களை மீளப்பெறுவதில் போதுமானளவு முன்னேற்றம் காணப்படவில்லை என்பதனை இங்கு குறிப்பிடவேண்டும். 1967இல் புதியவேளாண்மைக்கொடுகடன் தொடங்கியதிலிருந்து 1980 ஆம் ஆண்டின் சிறுபோகம் முடியும் வரையுள்ள காலப்பகுதியில் நெற் செய்கைக்காக வழங்கப்பட்ட ரூ. 12,090 இலட்சம் கொண்ட மொத்தத்தொகையில் ரூ. 5,790 இலட்சம் மட்டுமே மீளப்பெறப்பட்டுள்ளது. செலுத்தத்தவறியதொகை 52 சதவீதமானதாகும். இத்தொகைகள் கிராமக் கடன் வழங்கல்கள் மீளளிப்புக்களை விரைவுபடுத்துவதற்கான செயல்முறைகள் ஆகியன தொடர்பான அடிப்படைச் சிக்கல்களின் உள்ளார்ந்த தன்மையைக் காட்டுகின்றன.

## கைத்தொழில் [1]

1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்றுமதியையொட்டிய கைத்தொழில்களின் விரிவாக்கம், கைத்தொழில்களில் வெளிநாட்டு கூட்டுப்பங்காளர்கள் பெருமளவில் பங்குபற்றியமை, ஆற்றல்குறைந்த கைத்தொழில்கள் இறக்குமதிகளுடன் எதிரீடு செய்யமுடியாது காணப்பட்டமை, சிலவேளைகளில் மிகவும் ஆற்றல் குன்றிய தொழில் நிறுவனங்களை மூடியமை என்பன தயாரிப்புக் கைத்தொழிலில் காணப்பட்ட முதன்மையான பண்புகளாக விளங்கின.

1977ஆம் ஆண்டின் பொருளாதாரச் சீர்திருத்தங்கட்கு முன்பு நிலவிய கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வெளிநாட்டுச்செலாவணி ஒதுக்கு, உயர்ந்தளவான வரிகள் போன்றவற்றால் கைத்தொழில்கள் பெருமளவில் பாதுகாக்கப்பட்டன. சில கைத்தொழில்கட்கு மிகவும் கட்டுப்பாடான முறையில் கிடைத்த உதவிகளும் அபிவிருத்திக்கு ஒரு பாதுகாப்பாக அமைவதற்குத் தடையாக இருந்தன. இவ்வாறு தொடர்ச்சியாகவும் வெளிப்படையாகவும் நீண்டகாலம் நிலவிய இத்தகைய கட்டுப்பாடுகள் கைத்தொழில் துறையை ஒரு பின்தங்கிய துறையாக விளங்கச் செய்தன. இக்கட்டுப்பாடுகள் பெரும்பாலும் ஆற்றலற்ற கைத்தொழில்களை முன்னேறாது தடுத்தும், வெளிநாட்டு மூலதனங்கள் உள்வருவதைத் தடுத்தும், பெருங் கைத்தொழில்களில் முதலீடு செய்வதைத் தடுத்தும் வந்தன. பாதுகாப்பான சில வரிகள் வைத்திருக்கப்பட்ட வேளையில் வர்த்தகத்தின்மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையடுத்து இக்காலப்பகுதியில் சில முயற்சியாளர்கள் குறிப்பாக பெருங் கைத்தொழில் முயற்சியாளர்கள் 1977ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களையடுத்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடன் போட்டியிடக்கூடியவாறு இயலளவைப் பயன்படுத்தி அவர்களின் உற்பத்திப் பொருட்களின்

---

1. கடந்த காலங்களைப் போன்று தனியார்துறை கைத்தொழில் துறையின் 1980ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் தரவுகள், அரச துறைகளிலிருந்த சிறிய நடுத்தர பெரியதுமாக தெரிந்த தயாரிப்புக் கைத்தொழில்கட்கு மத்திய வங்கியால் அனுப்பி வைக்கப்பட்ட கேள்விக்கொத்துக்களின் கூற்றுகளின் அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. பொதுவாக பதில்கள் மூன்றிலொரு பகுதியினரிடமிருந்து கிடைத்தன. இவைகள் பெரிதும் பெருங்கைத்தொழில்களை அடக்கியிருந்தன. தரவுகள் கிடைக்காத பகுதிகளில் அரச முகவர் நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைத்த செய்திகளினடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

தரத்தை உயர்த்துவதற்கு வழிவகைகளை மேற்கொண்டனர். மூலதனமிடுவதற்கான திருந்திய சூழ்நிலையும், அவர்களது முதலீட்டு தொழிற்பாடுகளை மேலும் சீர்திருத்த உதவியது. விரிவாக்கம் பொருந்திய பல செயற்றிட்டங்கள் வெளிநாட்டுக் கூட்டுப்பங்காளர்களால் மூலதனம், தொழில்நுட்பம், முகாமைத்துவத் திறன் ஆகியனவற்றை வழங்குவதன் வாயிலாக உதவிசெய்யப்பட்டன.

உண்மையான நியதிகளில் 1980ஆம் ஆண்டில் திரண்ட கைத்தொழில் உற்பத்தி 6 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது. பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாராளமாக்கலைத் தொடர்ந்து நிறைவானதொரு ஆண்டாக 1979ஆம் ஆண்டு அமைந்தவேளையில், முன்னேறிச்செல்லும் ஒரு ஆண்டாக 1980ஆம் ஆண்டினைக் கூறலாம். இவ்வாண்டுக் காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகள் 31 சதவீதத்தால் அதிகரித்தமையே கைத்தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு தனிப்பெரும் முதன்மைக்காரணம் ஆகும். தைக்கப்பட்ட உடுப்புக்கள், மர உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், உருவாக்கப்பட்ட இரும்பும், இறப்பர் உற்பத்திகளும் உற்பத்தி மட்டங்களை உயர்த்தின.

மறுபுறத்தில் சில கைத்தொழில்கள் தாராளமான இறக்குமதிகளின் உள்வருகையால் நலிவடைந்தன. இவ்வகையில் புடவைக் கைத்தொழிலின் உற்பத்தி பின்னடைந்ததன்மை வெளிப்படையாக உள்ளது. ஆண்டுக்காலப்பகுதியில் சந்தைப்படுத்தலில் நிலவிய சிக்கல்கள் காரணமாக அரசிற்கு உடைமையான புடவை ஆலைகளினதும் தனியார் ஆலைகளினதும் நூலிழை, புடவை ஆகியவற்றின் உற்பத்தி கணிசமான அளவிற்கு குறைக்கப்பட்டன. உற்பத்தித்தரத்திற்கு பன்னாட்டு அளவில் பெயர் பெற்ற நாடுகளிலிருந்து பெருமளவு அழகிய துணிவகைகள் இறக்குமதிசெய்யப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட அழகிய துணிகளில் பெரும்பாலானவை காற்றமுக்கத்தறிகள், நீர் அமுக்கத்தறிகள், சுரிகைத்தறிகள் போன்ற உயர்தரமான தறிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டவை என்ற கருத்து வலியுறுத்தப்படல் வேண்டும். ஒப்புநோக்குமிடத்து இந்நாட்டில் பெரும்பாலான புடவை ஆலைகள் பல்வகைத் திறமற்றதும், பொருத்தமற்றதுமான சூழ்நிலையில் பழமையான பொறிகளையும், வரையறுக்கப்பட்ட திறமையையும் பயன்படுத்துகின்றன. பழமையான இப்பொறிகளால் நிறைவற்ற சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட வகையான துணிகளையும் புடவைகளையும் மட்டுமே உற்பத்தி செய்யக்கூடியதாக இருப்பதன் விளைவாக இவைகளும் உயர்ந்தசெலவில் தரமற்ற உற்பத்திகளாகவே இருக்கும். மேலும் இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள் உயர்ந்த விலைகளில் அமைந்திருந்தபோதும் நுகர்வோர் உயர் தரத்தை நாடியதன் காரணமாக வர்த்தகர்களால் இவ் இறக்குமதிப் புடவைகளை விற்கக்கூடியதாக இருந்தது. மேலும் வருகைதரும் பயணிகட்கு வழங்கப்பட்ட இலவச பொதிச்சலுகை, நடைமுறையிலிருந்து வந்த அஞ்சல் பரிசுத்திட்டம், போன்ற சலுகைகள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட புடவை தவறான முறையில் விற்கப்பட்டதனாலும் இறக்குமதிப் பொருட்களின் விற்பனை உறுதியாக இருந்தது. இக்காரணங்களால் இறக்குமதி செய்யப்பட்ட துணிகளின் தரம், விலை ஆகியவற்றுடன் உள்நாட்டு புடவை உற்பத்தியாளர்களால் போட்டியிட முடியவில்லை. இந்நிலையின் காரணமாக ஆண்டுஇறுதியில் புடவைக் கைத்தொழில்கள் கணிசமானளவு திரவநிலைச் சிக்கல்கட்கு உட்படவேண்டியிருந்தது. இந்நிலையில், அரசு தலையிட்டு தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் ஐந்து ஆலைகளின் முகாமைத்துவம் நல்ல முகாமைத்துவத்திற்கும், இக்கைத்தொழில் எதிர்நோக்கும் தொழில்நுட்ப அமைப்புச் சிக்கல்களை நுணுகிப் பார்ப்பதற்குமாக வெளிநாட்டுப் புடவைத் தயாரிப்பு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாறு தனியார் துறையை, மீளவலிமைப்படுத்துவதன் பொருட்டு ஐந்து பன்முகப்படுத்தப்பட்ட மின்தறி வேலைத்தளங்கள் 1980ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உள்ளூர் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன.

போட்டிவிலைகளில் பதிலீடுகள் இறக்குமதிசெய்யப்பட்டதன் காரணமாக ஏனைய பல்வேறு கைத்தொழில் முயற்சிகளும் சந்தைப்படுத்தலில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கின. இவ்வாண்டுக்காலப்பகுதியில் நுகர்வோரைப்பாதுகாக்கும் அதே வேளையில் உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக தீர்வை அமைப்பு முறையில் சீர்திருத்தங்களைச் செய்வதற்காக குடியரசுத்தலைவரின்தீர்வை ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கதொரு கொள்கை முடிவாக அமைகிறது. தற்பொழுதுள்ள தீர்வை அமைப்பு முறையின் கீழ் பொதுவாக மூலப்பொருட்களின் உள்ளீடுகட்கான தீர்வையினை விட உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான தீர்வை மிகவும் உயர்வானதாகும். இக்கொள்கை உள்நாட்டில் பெறுமதியினைக் கூட்டுவதற்கு துணைபுரிவதாக அமைகிறது எனினும் சில உற்பத்திகளையொட்டிய தீர்வைகளைப்பொறுத்து குறைபாடுகளும் நிலவுகின்றன. எடுத்துக்காட்டாக சில மருந்துவகைகளைக் குறைந்த தீர்வைகள் வீதத்தில் இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்பட்டுள்ள வேளையில் அதே மருந்து வகையினை தயாரிப்பதற்கும், அடைப்பதற்கும் தேவைப்படும் மூலப்பொருட்கள் உயர்ந்த தீர்வைக்கு உட்படுத்தப்படுகின்றன. இன்னுமொரு எடுத்துக்காட்டாக சில மின்துணைக்கருவிகளைப் பொறுத்தவரையில் முடிவுப் பொருட்களின் பெறுமதி உள்நாட்டு உற்பத்திப் பொருட்களிலும் பார்க்க உயர்வானதாக உள்ளது. நல்ல போட்டிச் சூழ்நிலை நிலவுவதற்கு இத்தகைய குறைபாடுகள் களையப்படுதல்வேண்டும். நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு வலிமையானதொரு தீர்வை பாதுகாப்பு வரம்புக்குள் அமையத்தக்கதாக பொருத்தமானதொரு தீர்வைக் கொள்கையை உருவாக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

மத்தியவங்கியின் கேள்விக்கொத்துக்களுக்கான பதில்கள் சந்தைப்படுத்தலில் நிலவிய சிக்கல்கள், குறைந்த மூலதனம், கூடிய செலவு, மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு என்பனவற்றின் விளைவாக ஆண்டுக்காலப்பகுதியில் பல சிறிய கைத்தொழில் முயற்சிகள் மூடப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய கைத்தொழில்கள் கைத்தறிப்புடவைகள், கையால் செய்யப்பட்ட தாள், இரசாயனங்கள், சவர்க்காரங்கள், பூச்சுக்கள், உருவாக்கப்பட்ட உலோகங்கள், என்பனவற்றை உற்பத்திசெய்யும் முயற்சிகளை உள்ளடக்கியிருந்தன. இக்கைத்தொழில்களால் எதிர்நோக்கப்பட்ட சிக்கல்கள் ஒரு புறமும் உள்நாட்டு மூலப்பொருட்களை இக்கைத் தொழில்களில் பயன்படுத்தி தொழில் வாய்ப்பினை உருவாக்குவதால் ஏற்படும் நலன்களை நோக்கும்போது அத்தகைய கைத்தொழில்களுக்கு வலிமையானதொரு தீர்வைப்பாதுகாப்பு தேவையானதென்ற அடிப்படையில் தற்போதைய தீர்வை அமைப்புமுறை விரைவாக ஆராயப்படுதல் மிகவும் இன்றியமையாததாகும். எனினும், இங்கு ஒரு கருத்து வலியுறுத்தப்படல்வேண்டும். இத்துறையில் போட்டியற்ற கைத்தொழில்கள் உற்பத்தியாக்கத்தில் ஈடுபடாதுவிடின் அதனால் தொழில்வாய்ப்பு, மொத்த வழங்கல் என்பனவற்றில் ஏற்படும்பாதகமான விளைவுகளால் ஏற்படும் நிலைமைகள் பொதுவாக எடுத்துரைக்கப்பட்டபோதிலும் அத்தகைய கைத்தொழில்களால் ஏற்படும் நலன்புரி நன்மைகளை தவிர்த்து பொருளாதார நன்மைகளைமட்டும் கருத்திற்கொண்டு தொடர்ந்து அவற்றை உற்பத்தியில் ஈடுபடவிடல் வேண்டும். போட்டியற்றதும் திறனற்றதுமான இக்கைத்தொழில்களின் செலவினை எதிரீடு செய்வதற்கு அரசு அல்லது நுகர்வோர் உதவு தொகை வழங்குமாறு வேண்டப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். நீண்டகால நலன்களைக் கருத்திற்கொண்டு இக் கைத்தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்த காரணிகளை மீளத்தொழிற்படுத்துதல் முழுமையாக நலன் தரக்கூடியதாக இருக்கும்.

கைத்தொழில்களின் செறிவினையொட்டி நாம் நோக்குமிடத்து கடந்த காலங்களில் தொழிற்றுறை ஒரு சில உற்பத்திப் பொருட்களிலேயே பெரிதும் தங்கியிருந்தமை தெரிகின்றது. 1980ஆம் ஆண்டின் நிலையும் வேறுபட்டதன்று. 1980ஆம் ஆண்டின் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் தூய்மையாக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் 45 சதவீதமாக அமைந்த வேளையில் தைக்கப்பட்ட ஆடைகளின் பங்கு ஏறத்தாழ 8 சதவீதமாக இருந்தது. இவ்வாறு இவ்விரு கைத்தொழில்களும் சேர்ந்து மொத்த கைத்தொழில் உற்பத்தி ஏறத்தாழ அரைப்பங்கிற்கு பொறுப்பாக இருந்துள்ளன. இதன் விளைவாக மொத்த கைத்தொழில் உற்பத்தியின் ஆற்றல் இவ்விரு கைத்தொழில்களின் நலன்களில் தங்கியிருந்தது. இந்நிலை பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்டதொரு கைத்தொழில் அமைப்பு உருவாகும் வரை தொடர்ந்திருக்கும். தைக்கப்பட்ட ஆடைகள் தொடர்பான கைத்தொழில்களைப் பற்றி இங்கு சிறப்பாக குறிப்பிடுதல் வேண்டும். இக்கைத்தொழில் கடந்தகாலத்தில் கொண்டிருந்த ஆற்றல்மிக்க நிரம்பிய தொழிற்பாடுகள் பல இறக்குமதி செய்யும் நாடுகள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய பொருளாதாரச்சமூகம் போன்றவற்றுல் மேற்கொள்ளப்பட்டுள்ள பங்குக்கட்டுப்பாடுகளின் காரணமாக ஆற்றலில் பின்னடைவினை வருங்காலத்தில் எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஐரோப்பிய பொருளாதார சமூகநாடுகள், நோர்வே, சுவீடன்,கனடா ஆகிய நாடுகளில் இலங்கையிலிருந்து தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதிகள் மீதான கட்டுப்பாடுகள் 1978 ஆம்ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருந்து வருகின்றன. பெருமளவில் இலங்கையிலிருந்து தைக்கப்பட்ட ஆடைகளின் இறக்குமதிகளைச் செய்துவந்த ஐக்கிய அமெரிக்கா 1980ஆம் ஆண்டு மே மாதம் 1ம் நாள் தொடக்கம் பங்குக் கட்டுப்பாடுகளை விதித்தது. ஏழு ஆண்டுகட்குச் செல்லுபடியாகும் நடைமுறையிலுள்ள ஐக்கிய அமெரிக்காவின் அனுமதிப்பங்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஒரு வகையான தைக்கப்பட்ட ஆடைகள்மீதான குறிப்பிட்ட வரையறைகளையும், துணை வரையறைகளையும் விதிக்கின்றது.இவ்வகையான எல்லா வரையறைகளும் பொருளாதாரத்தில் கைத்தொழில் அமைப்பினை பன்முகப்படுத்தப்பட வேண்டிய தேவையினை வலியுறுத்துகின்றன. இந்நோக்கை வேளாண்மையினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதன் வாயிலாக அடையலாம். தற்பொழுது இறப்பர் உற்பத்திகளின் பெரும்பகுதி ஒருவகையில் தயாரிக்கப்பட்ட நிலையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இக்கைத்தொழிலினை தும்புகலந்து தயாரிக்கப்பட்ட இறப்பர் உற்பத்திகள், ஊர்தி கைத்தொழில்களுக்கான இறப்பர் பொருத்துக்கள், இறப்பர் தரை ஓடுகள் போன்ற கைத்தொழில்களை விரிவாக்குவதன் வாயிலாக அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகையதொரு வாய்ப்பு தற்பொழுது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பெருந்தொகையான வேளாண்மை மூலப்பொருட்களுக்கும் பொருத்தமுடையதாக அமைகின்றது. தெங்கு உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை தரம்மிக்க கயிற்றுவகைகள், கயிற்றுவிரிப்புக்கள், தும்பைப் பயன்படுத்தி செய்யப்படும் துடைப்பம், தூரிகை, போன்ற இன்னோரன்னவற்றையும் கிளிசரின், கொழுப்பு நீர்மங்கள், தெங்கு, இரசாயன வகைகள் தெங்குப்பாகு போன்றவற்றை உற்பத்தி செய்வதன் வாயிலாக அபிவிருத்தி செய்யலாம். அரிசி, தவிடு, எள்ளு, நிலக்கடலை, சாதிக்காய், கறுவா, சிற்றனெல்லாப்புல் போன்ற சிறு வேளாண்மைப் பயிர்களைப் பயன்படுத்தி இன்றியமையாத எண்ணெய்களையும் மருந்துகளையும் உற்பத்தி செய்யலாம்.

1980ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு (வெமுமகு) ரூ. 17,920 இலட்ச மூலதன வாய்ப்பினையும், 5313 பேருக்கு தொழில் வழங்கக்கூடியதென மதிப்பிடப்பட்ட 86 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.

இவ்வாண்டுக் காலத்தில் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள், புடவைக் கைத் தொழில்கள், கடற்றொழில் ஆகிய அமைச்சுக்களிலுள்ள உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழு 699 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தன. இச் செயற்றிட்டங்கள் ரூ. 3,370 இலட்சம் கொண்ட முதலீட்டையும் ஏறத்தாழ 15,400 பேருக்கு தொழில் வாய்ப்பினையும் வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கைத் தொழில் அறிவியல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு அளவீடு உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவால் 1977 யூலை தொடக்கம் 1980 மே வரை ஒப்புதலளிக்கப்பட்ட 2012 செயற்றிட்டங்களில் 40 சதவீதம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதையும், மேலும் 28 சதவீதம் எதிர்காலத்தில் உற்பத்தியினை தொடங்கவுள்ளமையையும் வெளிப்படுத்துகின்றது.

1980 ஆம் ஆண்டின் இறுதியில் இருபெரும் கைத்தொழில் முயற்சிகள் உற்பத்தியினை தொடங்கியமை மேலுமொரு அபிவிருத்தியாக அமைகிறது. அவை யாவன பிறிமா மாவாலைச் செயற்றிட்டமும், யூரியா வளமாக்கித் தொழிற்கூடமுமாகும். இவ்விரு முயற்சிகளின் வெளியீடு 1981ஆம்ஆண்டு தொடக்கம் கணிசமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. திருகோணமலை சீனக்குடாவில் அமைந்துள்ள பிறிமா செயற்றிட்டத்தின் ஆண்டு உற்பத்தி இயலளவான 600 ஆயிரம் மெற்றிக் தொன்கள் தட்டுப்பாடுகளை எதிரீடு செய்யக்கூடிய இயலளவுடன் உள்நாட்டு தேவைகளையும் ஈடுசெய்யக்கூடியதாகும். இலங்கை வளமாக்கித் தயாரிப்பு கூட்டுத்தாபனத்தால் முகாமைப்படுத்தப்படும் சப்புகஸ்கந்தையிலுள்ள யூரியா வளமாக்கி தொழிற்கூடம் 1981ஆம் ஆண்டில் 217 ஆயிரம் மெற்றிக் தொன்கள் யூரியாவையும் 1982ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டுக்கு 310 ஆயிரம் மெற்றிக் தொன்கள் யூரியாவையும் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சப்புகஸ்கந்தையிலுள்ள அதன் தூய்மையாக்கும் தொழிற்கூடத்திலிருந்து மூலப் பொருட்களை வழங்கும். உள்நாட்டுத் தேவைக்கு மிஞ்சிய யூரியா உற்பத்தி ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் ஏற்றுமதிகள் வாயிலாக கிடைத்த வருவாய்கள் 1979ஆம் ஆண்டில் ரூ. 37,370 இலட்சத் (சிஎஉ 1,860 இலட்சம்) திலிருந்து 47 சதவீதத்தால் அதிகரித்து (சிஎஉ 37 சதவீதம்) 1980ஆம் ஆண்டில் ரூ. 54,960 இலட்சமாக (சிஎஉ 2550 இலட்சம்) அமைந்தது. வருமானத்திலிருந்து ஏற்பட்ட அதிகரிப்பிற்கு தைக்கப்பட்ட ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

**உற்பத்தி**

1980ஆம் ஆண்டில் தயாரிப்பு கைத்தொழிலின் மொத்த வெளியீட்டு வளர்ச்சி உண்மை நியதிகளில் 6 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. மேலும் இது பெற்றோலிய உற்பத்திகளிலேற்பட்ட விரைவான வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகின்றது. மர உற்பத்திகளின் உண்மையான பெறுமதி 56 சதவீதத்தாலும், பெற்றோலியம் இரசாயன உற்பத்திகள் 22 சதவீதத்தாலும், அடிப்படை உலோக உற்பத்திகள் 12 சதவீதத்தாலும், புடவைகள் அணியும் ஆடைகள் 5 சதவீதத்தாலும், உலோகமற்ற கனிப்பொருள் உற்பத்திகள் 2 சதவீதத்தாலும் அதிகரித்தது. மறுபுறத்தில் தாள், தாள் உற்பத்திகள் 17 சதவீதத்தாலும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 16 சதவீதத்தாலும் உணவு குடிவகைகள் 6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

## அட்டவணை 1.14

### கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1976—1980

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் (நிறுவனங்களின் எண்ணிக்கை அடைப்புக்குள்) (அ)

| கைத்தொழில் பிரிவு | 1976 | 1977 | 1978 | 1979 | 1980 (ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை, புகையிலை ... | 1,715 (158) | 2,295 (162) | 2,609 (136) | 2,856 (158) | 3,899 (165) |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 680 (602) | 698 (665) | 1,008 (654) | 1,128 (589) | 1,879 (529) |
| 3. தளபாடங்கள் உட்பட மர, மர உற்பத்திகள் ... | 129 (17) | 127 (15) | 124 (23) | 166 (28) | 247 (31) |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 203 (58) | 270 (64) | 376 (65) | 445 (65) | 476 (63) |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர்... பிளாத்திக்கு உற்பத்திகள் | 2,336 (220) | 2,469 (233) | 3,279 (215) | 4,508 (193) | 8,603 (216) |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து உலோக... மல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 360 (72) | 411 (58) | 592 (57) | 710 (67) | 914 (65) |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 138 (1) | 132 (1) | 219 (1) | 349 (1) | 478 (1) |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் ... | 474 (358) | 571 (285) | 590 (296) | 569 (301) | 620 (268) |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வே. எ. கு.) ... | 26 (22) | 34 (27) | 55 (26) | 50 (33) | 54 (28) |
| மொத்தம் ... | 6,061 (1,508) | 7,007 (1,510) | 8,852 (1,473) | 10,781 (1,435) | 17,170 (1,366) |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) மத்திய வங்கியின் வினாக்கொத்திற்கு பதிலிறுத்த நிறுவனங்களின் எண்ணிக்கை.

(ஆ) தற்காலிகமானவை.

நடைமுறைப் பெறுமதிகளின் நியதிகளில் அட்டவணை 1.14இல் காட்டப்பட்டுள்ளவாறு கைத்தொழில் திரண்ட உற்பத்தி 1980 ஆம் ஆண்டில் 59சதவீதத்தால் அதிகரித்தது. இதற்குக் காரணம் யாதெனில் பெற்றோலிய உற்பத்திகளின் தொழிற்கூடப் பெறுமதி இருமடங்காக அதிகரித்தமையே பெரிதும் காரணமாகும். பெற்றோலிய உற்பத்திகளை தவிர்ப்பின் ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் நடைமுறைப் பெறுமதி ஆண்டுக்காலப்பகுதியில் 33 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. 1980ஆம் ஆண்டில் இரசாயனம், பெற்றோலிய உற்பத்திகளின் பெறுமதி 91 சத வீதத்தாலும், மரம், மரப்பொருட்கள் 49 சதவீதத்தாலும், அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும் 67 சதவீதத்தாலும், அடிப்படை உலோக உற்பத்திகள் 37 சத வீதத்தாலும், உணவு குடிவகைகள் புகையிலை 37 சதவீதத்தாலும், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்தி 29 சத வீதத்தாலும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 9 சதவீதத்தாலும், தாள் உற்பத்திகள் 7 சதவீதத்தாலும் அவற்றின் பெறுமதியில் அதிகரித்தன.

இரசாயனங்கள் பெற்றோலிய உற்பத்திகள் ஆகியவற்றின் வெளியீட்டில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்கூடத்தின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். 1979ஆம் ஆண்டுக் காலத்தின்போது பலமாதங்களாக தொடர்ந்து தூய்மைப்படுத்தும் தொழிற்கூடம் மூடப்பட்டிருந்தமையாலும் மசகெண்ணெய் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவும் பெற்றோலிய உற்பத்திகள் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்

தன. 1980ஆம் ஆண்டுக்காலத்தில் உற்பத்தி அமைப்பு முறையில் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப மாற்றங்களின் மூலம் மசகெண்ணெயை கூடுதலாக உள்ளீர்க்கக்கூடியதாக இருந்தது. 1980 ஆம் ஆண்டில் தூய்மைப்படுத்தும் தொழிற் கூடத்தின் மசகெண்ணெயை வடிக்கும் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் தொடக்க வடித்தல் இயலளவினை 33 சதவீதத்தால் அதிகரிக்கச்செய்தன.

**வலுவும் எரிபொருளும்**

இவ்வாண்டுக்காலத்தில் கைத்தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி ஏற்றுமதி உற்பத்திக் கைத்தொழில்கள் உட்பட கைத்தொழில்கட்கு விற்கப்பட்ட கைத் தொழில் எரிபொருட்களின் விற்பனையை 31 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தது.

அட்டவணை 1.15

**கைத்தொழிலில் வலு, எரிபொருள் என்பவற்றின் பயன்பாடு 1978—1980**

| விடயம் | 1978 | 1979 | 1980 (அ) |
|---|---|---|---|
| **1. கைத்தொழிலில் மின்வலு பயன்பாடு ஆ (கிகோவாட் மணித்தியாலங்கள்)** ... | **587.9** | **633.4** | **618.1** |
| 1.1 சிறு கைத்தொழில் ... | 10.6 | 16.7 | 24.0 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... | 278.2 | 287.3 | 285.5 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... | 299.1 | 329.4 | 308.6 |
| **2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் ('000 மெற்றிக் தொன்கள்)** .. | **220.4** | **226.1** | **295.4** |
| 2.1 பார எண்ணெய் ... | 60.8 | 64.0 | 60.8 |
| 2.2 உலை எண்ணெய் .. | 159.6 | 162.1 | 234.6 |

மூலங்கள்: இலங்கை மின்சபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) தற்காலிகம்.
(ஆ) தயாரிப்பு ஏற்றுமதி செய்முறை கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறுகைத்தொழில் என குறிப்பிடப்பட்டுள்ளவை 50 கி. வா.மா.க்கு குறைந்த இயலளவினைக் கொண்ட கூறுகளாகவும், நடுத்தர கைத்தொழில் 50-500 கி. வா. மாக் கொண்டவையாகவும் பெரும் கைத்தொழில் 500 கி. வா. மா. க்கு மேற்பட்டவையுமாகும்.

மின்வெட்டின் காரணமாக கைத்தொழில்களில் பயன்படுத்தப்பட்ட மின் வலு 2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஆண்டின் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் பெரிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டத்தில் வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக குறிப்பிட்ட நேரங்களில் மின் வழங்கல் குறைக்கப்பட்டது. எனினும், பெருங் கைத்தொழில்கள் துணை நில் மின் உருவாக்கிகளை பயன்படுத்தியும், மின்வெட்டில்லாத நேரங்கட்கு தொழிற்பாடுகளை மாற்றியமைத்தும் இந்நிலைக்கேற்ப தம்மை சீர்ப்படுத்திக்கொண்டதன் காரணமாக மின்வெட்டின் தாக்கம் கைத்தொழில்களில் சிறிதளவினதாகவே இருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட பல அரசதுறை முயற்சிகள் அவற்றின் சொந்த மின் உருவாக்கிகளைப் பயன்படுத்தியமையால் மின்வெட்டுக்கள் இம்முயற்சிகளைப் பாதிக்கவில்லை. தனியார்துறையைப் பொறுத்தவரையில் சில கைத்தொழில்கள் துணை நில் மின் உருவாக்கிகளைப் பயன்படுத்தி சிக்கலினை எதிர்நோக்கத் தயாராக இருந்தவேளையில் சில முயற்சிகள் தமது வேலைநேரங்களை மாற்றியமைத்து சிக்கலினை எதிரீடுசெய்தன.

**அரசதுறைக் கைத்தொழில்கள்**

அட்டவணை 1.16 இல் காட்டப்பட்டவாறு அரசதுறை முயற்சிகளின் திரண்ட கைத்தொழில் உற்பத்திகள் 1980 ஆம் ஆண்டில் 6 சதவீதத்தால் அதிகரித்தன. மர, மர உற்பத்திகளின் வெளியீடு 64 சதவீதத்தாலும், இரசாயனங்கள் பெற்றோலிய உற்பத்திகளின் வெளியீடு 29 சதவீதத்தாலும், அடிப்படை உலோக உற்பத்திகளின் வெளியீடு 8 சதவீதத்தாலும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் வெளியீடு 7 சதவீதத்தாலும் அதிகரித்தன. மாறாக புடவை உற்பத்திகள் 24 சதவீதத்தாலும், உணவு குடிவகைகள் 8 சதவீதத்தாலும், உலோகமற்றகனிப் பொருள் உற்பத்திகள் 5 சத வீதத்தாலும், தாள் - தாள் உற்பத்திகள் 1 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 1.16

**முதன்மை அரசதுறை கைத்தொழில்களின் வெளியீட்டு சுட்டெண் (அ)**

*(1977 = 100)*

| கைத்தொழில் பிரிவு | 1978 | 1979 | 1980 (ஆ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிவகை புகையிலை ... | 104 | 95 | 87 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 114 | 111 | 84 |
| 3. தளபாடங்கள் உட்பட மர உற்பத்திகள் ... | 78 | 96 | 158 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 90 | 131 | 130 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 103 | 97 | 125 |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும், தவிர்த்து உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ... | 144 | 157 | 150 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 145 | 176 | 190 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் ... | 119 | 107 | 115 |
| எல்லா வகைகளும் ... | 108 | 111 | 118 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) பல அரச கூட்டுத்தாபனங்களை உள்ளடக்குவதன் பொருட்டு இச்சுட்டெண் மீளத் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகம்

அரசதுறை கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 1979ஆம் ஆண்டின் ரூ. 20,120 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1000 இலட்சம்) 1980ஆம் ஆண்டில் ரூ. 32,390 இலட்சமாக (சிஎஉ 1540 இலட்சம்) அதிகரித்து சிஎஉ நியதிகளில் 54 சதவீதங்கொண்டதொரு அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இதற்கு பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருவாயில் ஏற்பட்ட 56 சதவீதங்கொண்ட பெருமளவு அதிகரிப்பே காரணமாகும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருவாயின் வளர்ச்சிக்கு ஏற்றுமதியளவில் ஏற்பட்ட அதிகரிப்புடன் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் இணைந்த நிலையில் உதவிபுரிந்தது.

இவ்வாண்டுக்காலப் பகுதியில் அரசிடமிருந்து கைத்தொழில் முயற்சிகளுக்கான நடைமுறை மாற்றல் கொடுப்பனவுகளில் காணப்பட்ட கணிசமானவீழ்ச்சி குறிப்பிடத்தக்கதொரு அபிவிருத்தியாகும். அரசதுறை முயற்சிகளை வர்த்தக அடிப்படையில் இலாபமிக்க முயற்சிகளாக மாற்றுவதற்கான அரசின் தீர்மானத்திற்கேற்ப, இவ்வமைப்புக்கள் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ஒதுக்குகட்கு உட்பட்டு தொழிற்பட முயற்சித்தன. பல தொழில் முயற்சிகள் நிதியிடலில் ஒழுங்குமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டதன் காரணமாக நடைமுறைச் செலவுகட்கு அரசிடமிருந்து தேவைப்படும் மாற்றங்களில் வீழ்ச்சி ஏற்படுவதற்கு ஏதுவாயிற்று. இம்மாற்றல்களின் வீழ்ச்சி 1979 ஆம் ஆண்டில் ரூ. 2,100 இலட்சங்களிலிருந்து 1980இல் ரூ. 820 இலட்சமாக அமைந்தது. எனினும் மூலதன மாற்றல்கள், மாற்றல்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் காரணமாக மொத்த மாற்றல்கள் 1979ஆம் ஆண்டின் ரூ. 2,490 இலட்சத்திலி

## அட்டவணை 1.17

## கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1978 — 1980

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத்தாபனங்கள் / முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1979 | 1980(அ) | 1978 | 1979 | 1980(அ) | 1978 | 1979 | 1980(அ) |
| தேசிய பாற் சபை ... | — | 12.8 | 16.2 | 82.7 | 54.0 | 53.0 | 82.7 | 66.8 | 69.2 |
| இலங்கை எண்ணெய் கொழுப்பு ... | — | — | 25.3 | 16.4 | 27.0 | — | 16.4 | 27.0 | 25.3 |
| இலங்கைச் சீனி ... | — | 4.5 | 81.8 | — | — | — | — | 4.5 | 81.8 |
| தேசிய புடவைகள் ... | 4.2 | 10.9 | 13.6 | — | 13.4 | — | 4.2 | 24.3 | 13.6 |
| இலங்கை ஒட்டுப்பலகை ... | 0.3 | — | — | — | — | — | 0.3 | — | — |
| அரச மரம் ... | 1.8 | — | — | — | — | — | 1.8 | — | — |
| தேசிய தாள் ... | 33.7 | — | 78.0 | 10.5 | — | 28.7 | 44.2 | — | 106.7 |
| பரந்தன் இரசாயனம் ... | 0.7 | — | — | — | — | — | 0.7 | — | — |
| இலங்கை ஆயுள் வேத மருந்துகள் ... | 0.5 | 10.6 | 1.2 | — | — | — | 0.5 | 10.6 | 1.2 |
| அரச வளமாக்கித் தயாரிப்பு கூட்டுத்தாபம் ... | 1,061.4 | — | 624.1 | — | — | — | 1,061.4 | — | 624.1 |
| இலங்கைப் பெற்றோலியம் ... | 8.2 | — | 10.7 | 528.0 | 87.0 | — | 536.2 | 87.0 | 10.7 |
| அரச இறப்பர் தயாரிப்பு ... | 4.6 | — | — | 0.6 | 0.2 | — | 5.2 | 0.2 | — |
| இலங்கைச் சீமெந்து ... | 28.1 | — | 16.0 | — | — | — | 28.1 | — | 16.0 |
| இலங்கைக் கனிப்பொருட்கள் ... | 23.7 | — | 4.5 | — | — | — | 23.7 | — | 4.5 |
| அரச அகழ்வு .. | | — | 1.9 | — | — | — | — | — | 1.9 |
| இலங்கை உருக்கு ... | 67.5 | — | 10.7 | — | — | — | 67.5 | — | 10.7 |
| அரச வன்கலம் ... | — | — | 2.0 | — | 28.6 | — | — | 28.6 | 2.0 |
| மொத்தம் ... | 1,234.7 | 38.8 | 886.0 | 638.2 | 210.2 | 81.7 | 1,872.9 | 249.0 | 967.7 |

மூலம்: திறைசேரி

(அ) திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பீடுகள்

ருந்து 1980ஆம் ஆண்டில் ரூ. 9,680 இலட்சமாக அதிகரித்தது. மொத்த மூலதன மாற்றல்களின் தொகை 1979ஆம் ஆண்டின் ரூ. 390 இலட்சத்திலிருந்து 1980 ஆம் ஆண்டில் ரூ. 8,860 இலட்சமாக அதிகரித்தது. அரச வளமாக்கி தயாரிப்புக் கூட்டுத்தாபனம் (யூரியா பொறித்தொகுதி) தேசிய தாள் ஆலைக் கூட்டுத்தாபனம் (எம்பிலிப்பிட்டிய தாள் ஆலை) சீனிக் (செவனகல சீனிச் செயற்றிட்டம்) கூட்டுத் தாபனம் ஆகியவற்றிற்கு கணிசமான மூலதன மாற்றல்கள் வழங்கப்பட்டன. இவ்வெண் தொகைகள் அட்டவணை 1.17இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அரச முறைத்தொழில் முயற்சிகள் அவற்றின் புதிய செயற்றிட்டங்களுக்குத்தேவைப்படும் மூலதன மூலவளங்களை தாமே திரட்ட எதிர்பார்க்கப் படுவதால் அரசதுறை தொழில் முயற்சிகளுக்குத் தேவைப்படும் மூலதன மாற்றல்களின் அளவு எதிர் காலத்தில் வீழ்ச்சியடையும்.

**முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்**

அரசின் தற்போதைய முன்னணி செயற்றிட்டங்களில் ஒன்றான கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு (கொபெபொஆ) ஆண்டு இறுதியின் போது 137 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல்கள் வழங்கியது. இவற்றில் 64 நிறு வனங்கள் பல்வேறுவகைப்பட்ட கைத்தொழில்களை தொடங்குவதற்கு கொபெ பொஆவுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தன. இவற்றில் கட்டுநாயக்கா விலுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் (முஊவ) ஆண்டின் இறுதியில் 23 நிறுவனங்கள் பெரும்பாலும் ஆடைதயாரிக்கும் வர்த்தக அடிப்படையிலான உற் பத்தியில் ஈடுபட்டிருந்தன. மேலும் ஐந்து நிறுவனங்கள் மாதிரி உற்பத்தியில் ஈடுபட்டன. முஊவ விலுள்ளதொழிற்கூடங்கள் 10,581ஆட்களுக்குதொழில்வாய்ப் பினை வழங்கியிருந்தன. 1980ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் முஊவ ஏற்றுமதிகளி லிருந்து ரூ. 5,050 இலட்சம் கிடைத்தது. (சி.எ.உ. 220 இலட்சம்) இத்தொகையில் 93 சதவீதம் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதியிலிருந்து கிடைத்தது. தொழில் நிலை, மொத்த வருவாய்கள் என்பன கைத்தொழிலின் தன்மைப்படி வகைப்படுத் தப்பட்டு ஒப்பிடக்கக்கூடியவாறு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. ஆண்டுக்காலப்பகுதியில் ஆணைக்குழுவால் ஒப்புதலளிக்கப்பட்ட கைத்தொழில்கள், மின்னியல் பொருத்துக்கள், மின்கருவிகள், சரக்குப் பேழைகள், பொறித்தொகுதி, நீர்இறைக்கும்பொறிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் கைத்தொழில்களை உள்ள டக்கியிருந்தன. வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரும் பொருட்டு பன்னாட்டு மட்டத்தில், முதலீட்டுக்கருத்தரங்குகள், செய்தி ஏடுகளில் விளம்பரங்கள், நேர் முக விளம்பல்கள் என்பன பயன்படுத்தப்பட்டன.

அட்டவணை 1.18

**முதலீட்டு ஊக்குவிப்பு வலயக் கைத்தொழில்கள் — ஏற்றுமதிகளும்தொழில் வாய்ப்பும்**

| கைத்தொழில் | 1979 | | 1980 (அ) | |
|---|---|---|---|---|
| | தொழில்நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ப. இ. ரூ. | தொழில்நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ப. இ. ரூ. |
| 1. ஆடைகள் ... | 5,675 | 145.1 | 9,147 | 470.1 |
| 2. மீன்பிடி வலைகளும் கருவிகளும் ... | 73 | 5.1 | 245 | 10.6 |
| 3. இறப்பர் நூல்கள் ... | 26 | 1.2 | 82 | 12.1 |
| 4. இரத்தினக்கல் வெட்டல் ... | 110 | 0.7 | 285 | 3.2 |
| 5. தேயிலை உறைகளிலடைத்தல் ... | — | — | 12 | 3.8 |
| 6. மரமுந்திரி உற்பத்திகள் ... | — | — | 483 | 4.8 |
| 7. ஏனையவை ... | — | — | 327 | 0.7 |
| மொத்தம் ... | 5,884 | 152.1 | 10,581 | 505.3 |

(அ) தற்காலிகம்

மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு